தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-

மலர் 25

இதழ் 06

அக்டோபர் 2023


மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்






## மதி சிறுதானிய சிற்றுண்டியகம்
## திறப்பு விழா







“மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்தின் வெற்றிக்கு உங்களின் உழைப்புதான் முக்கிய காரணம் என்பதை அறிந்து நீங்கள் உங்களின் உழைப்பையும், ஊக்கத்தையும் கைவிடாது உற்சாகத்துடன் செயல்பட்டு நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்ட வேண்டும்”

முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,**

மகளிர் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ள நீங்கள், அனைத்துத் துறைகளிலும் உங்களின் ஆளுமையையும், திறமையையும் வெளிப்படுத்தி சிறந்த தொழில் முனைவோர்களாகத் திகழ்ந்து வருகிறீர்கள். இது சுய உதவிக் குழு இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதுமட்டுமல்லாது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலமாகவும் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் நகர்ப்புரங்களிலும், கிராமப்புறங்களிலும் செயல்படும் சுய உதவிக் குழுவினர் பொருளாதார வளர்ச்சி பெற்றுவருகின்றனர். மேலும் தீனதயாள் உபாத்யாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படுவதுடன், சுய தொழில் மேற்கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உங்களின் செயல்பாடுகளுக்கு என்றும் துணை நிற்கும். மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்தின் வெற்றிக்கு உங்களின் உழைப்புதான் முக்கிய காரணம் என்பதை அறிந்து நீங்கள் உங்களின் உழைப்பையும், ஊக்கத்தையும் கைவிடாது உற்சாகத்துடன் செயல்பட்டு நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்ட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

ஒரு பெண் முன்னேற்றம் அடையும் போது அவள் ஒருத்தி மட்டுமே பயன் பெறாமல், அந்தப் பெண்ணின் குடும்பமும் சேர்ந்தே பயனடையும். இன்றைய காலகட்டத்தில் ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வருபவர்கள் பெண்கள். தன் குடும்பம், தன் மகிழ்ச்சி என இல்லாமல், தடைகளைத் தகர்த்து தன்னலமற்று செயல்படும் வலிமை கொண்டவர்களாக சுய உதவிக் குழு மகளிர் உருவெடுத்துள்ளனர்.

மகளிர் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை தமிழகத்தின் கடைகோடியில் வசிக்கும் பெண்களிடமும் கொண்டு சேர்க்கும் உன்னத பணியை நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக செய்து வருகிறது.

சுய உதவிக் குழுவினருக்கு தொழில் பயிற்சிகள் வழங்குதல், தொழில் குழுக்களை உருவாக்குதல், நகர்ப்புர வாழ்வாதார மையம் அமைத்தல், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கான உண்டு உறைவிடங்கள் அமைத்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, உரிய வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருதல் போன்ற செயல்பாடுகள் நமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏழை எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்கு உரியவர்களாக இருக்கும் நீங்கள், இடையூறுகளையும், தடைகளையும் தகர்த்து மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும்.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுமார் 1.06 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை துவக்கி வைத்துள்ளார். இத்திட்ட செயலாக்கத்தில் சுய உதவிக் குழு மகளிரான உங்களின் பங்களிப்பும் உள்ளதால், நீங்கள் இத்திட்டத்தின் அங்கமாக செயல்பட்டதால் பெருமிதம் கொள்ளலாம்.

உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், அதன் துணை அமைப்புகளும் என்றும் துணை நிற்கும் என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

**அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,**

''பெண்களால் என்ன செய்ய முடியும்?'' என்று நினைத்தவர்களுக்கு, ''எங்களாலும் சாதிக்க முடியும்'' என்று செயல்பட்டு வெற்றி பெற்று வரும் சுய உதவிக் குழு மகளிரான உங்களால் தான் நமது நிறுவனத்திற்கும், நம் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை. இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ள உங்களுடன் மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறார். இத்தகைய நடவடிக்கைகளால் சுய உதவிக் குழு இயக்கமானது மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது.

ஊரகம் மற்றும் நகர்ப்புரங்களில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், நமது அரசின் நலத் திட்டங்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்பது போல் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல் பட்டால் நமது இயக்கம் மேலும் மேலும் சாதனைகள் படைக்கும் இயக்கமாக மாறிவிடும்.

சுய உதவிக் குழுவினர் தாங்கள் மேற்கொள்ளும் செயலில் உறுதியாக இருந்து சிறப்பாக செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையினால்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், அரசின் பிற துறை செயல்பாடுகளான மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஆகிய சிறப்புமிகு திட்டங்களில் சுய உதவிக் குழுவினரான உங்களையும் இணைத்து செயல்படுத்தி வருகின்றனர். இது நமக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகும்.

எனவே, சுய உதவிக் குழுவினரான நீங்கள் இன்னும் ஊக்கத்துடன் செயல்பட்டு சாதனைப் படைப்பவர்கள் சுய உதவிக் குழுவினர் என்பதை அனைவரும் உணர்ந்திடச் செய்திட வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்**

–(குறள்–111)

பகைவர், அயலோர், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒரு தலைச்சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

# உள்ளே...


| | |
|---|---|
| கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடக்கம் | 07 |
| சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு | 08 |
| மதி சிறுதானிய சிற்றுண்டியகம் திறப்பு | 13 |
| மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | 14 |
| பாலின வள மையம் "வானவில் மையம்" | 18 |
| உடல் நலம் காப்போம்... | 21 |
| முள்ளங்கி சப்பாத்தி | 32 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 06 • அக்டோபர் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பா.ஜெயசுதா,** பொது மேலாளர் (பொ),

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# நிலைத்தத்தன்மை பெறும் பெண் உரிமை...



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

தமிழ்நாடு பெண்களின் உரிமை பயணத்தில் மேலும் ஓர் இனிய நிகழ்வு.... அதுதான் "கலைஞர் மகளிர் உரிமை தொகை" எனும் திட்டம். இத்திட்டத்தில் தகுதி வாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்ப தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 1000/- வழங்கப்படுவதாகும். இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, இத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை கூடுதலாகும் என தெரிவித்துள்ளார். மாதந்தோறும் பெறும் இத்தொகையானது ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும்ப தலைவிகளுக்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதமாகும்.

அதோடு, இவ்வாறு ஒரு கோடி குடும்பத்தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் இந்த தொகையானது குடும்ப செலவுகளுக்கு ஒரு ஆதரவாக இருப்பதோடு பண புழக்கம் உருவாகி பெரும் நுகர்வுக்கு வழிவகுக்கிறது. இவ்வாறு நுகர்வு அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி பெருகி பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதுபோன்ற காரணங்களால் பல தரப்பினரிடையே இத்திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

பெண்களுக்கு சொத்துரிமை, பெண்கள் உயர்கல்வி படிப்பதற்கு மாதம் ரூ.1000/- வழங்கும் புதுமைப் பெண் திட்டம், பெண்கள் உள்ளாட்சிகளில் பிரதிநிதித்துவம் வகிக்க 30% இட ஒதுக்கீடு, பெண்கள் விழிப்புணர்வு பெற்று சமுதாயத்தில் ஆற்றல் மிக்கவர்களாக மாற மகளிர் திட்டம் ஆகிய திட்டங்கள், பெண் கல்வி, விழிப்புணர்வு, தலைமை பண்பு, பொருளாதார சுதந்திரம் ஆகியவைகளை பெற்று, சமுதாயத்திற்கான முடிவுகள் எடுப்பதில் பங்கு கொள்வதை இந்த திட்டங்கள் உறுதி செய்கின்றன. பரப்புரையோடு மட்டுமல்லாமல், இவ்வாறான செயல் வடிவின் மூலமே பெண்ணடிமையை ஒழிக்க முடியும். அதோடு, பெண்களின் உரிமையும் முன்னேற்றத்தையும் நிலைபெற செய்ய முடியும்.

பேருந்துகளில் இலவச பயணம், மகளிர் உரிமைத் தொகை திட்டம் ஆகிய திட்டங்கள் பெண்களின் அத்தியாவசிய தேவைக்கு உதவுவதோடு, அவர்களிடையே பாதுகாப்பையும், நம்பிக்கையையும் உறுதி செய்கிறது. பெண்ணுரிமைக்கு மெருகூட்டுகிறது. இதுபோன்ற திட்டங்களுக்கு பெருமளவு நிதியை செலவிடுவதற்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அசாத்தியமான துணிவும், அதைவிட மக்களுக்கு உதவி செய்யும் பரந்த மனமும் தேவைப்படுகிறது. பெண் குழந்தைகளை உள்ளடக்கிய இலட்சக்கணக்கான பள்ளி சிறார்களுக்கு சத்தான காலை சிற்றுண்டி வழங்கும் துணிச்சல் மிக்க திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டுப் பெண்கள் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்






# ஒருகோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன் பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2023 அன்று, காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards)வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம்.மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.சுந்தர், திரு. சி.வி.எம்.பி.எழிலரசன், திரு.கு.செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., கலைஞர் மகளிர் உரிமைத் திட்டசிறப்புப் பணி அலுவலர் திரு. க.இளம்பகவத், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






# சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு

தந்தைப் பெரியார் அவர்களின் பிறந்த நாளை (17.09.2023) முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.09.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், "சமூக நீதி நாள்" உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள்திரு.கே.சுந்தர்,திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், திரு. கு.செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.




# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் "ஊராட்சி மணி" குறை தீர்க்கும் மையம் தொடக்க விழா

ஊரகப் பகுதிகளில் ஏற்படும் குறைகளைக் களையும் பொருட்டு "ஊராட்சி மணி" என்கிற அமைப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், பொது மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஊராட்சிகளைத் தொடர்பு கொள்ளும் வகையில் "155340" என்ற இலவச குறை தீர்வு அழைப்பு எண் பிரத்யேகமாக மாநில அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறை மூலம் பொதுமக்கள் தொலைபேசி (155340), வலைதளம் **(Ooratchimani.in)** வாயிலாக எளிதாக அணுக முடியும். மேலும் பெறப்படும் புகார்களின் தன்மைக்கேற்ப அலுவலக ரீதியிலான கால தாமதம் தவிர்க்கப்பட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்புகார் மீது எளிய முறையில் உடனடித் தீர்வு காணப்படும். மேலும், ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு ஏற்படும் குறைகளையும், சந்தேகங்களையும் இந்த ஊராட்சி மணி மூலம் அணுகி பதில் பெறும் வகையில் இச்சேவை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்களால் 27.09.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மை செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் (பொது) திரு. எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப அவர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.






# கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டை வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.09.2023 அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் தேனாம்பேட்டை மண்டலம், இராயப்பேட்டை, ஒய்.எம்.சி.ஏ. மைதான அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பரந்தாமன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை செயலாளர் திரு. தாரேஷ் அகமது, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் திரு. எஸ். மதன்மோகன், இந்தியன் வங்கி தலைமைப் பொது மேலாளர் திரு. சுதாகர் ராவ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குதல்





மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதியில் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் நிகழ்ச்சி 20.09.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை செயலாளர் திரு. தாரேஷ்அகமது, இ.ஆ.ப., மதுரை மாநகர மேயர் திருமதி இந்திராணி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு. கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மக்கள் நலம் நாடும் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக கடைக்கோடி கிராமத்தில் வசிப்பவர்கள் கூட அரசின் திட்டங்களால் பயன் பெற்று வருகின்றனர். அரசின் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், அவற்றில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்தும் மாவட்டந்தோறும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்வதுடன், சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்.





## அரியலூர் மாவட்டம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 28.08.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசு துறைகளின் சார்பில் 1,735 பயனாளிகளுக்கு ரூ. 10 கோடியே 56 லட்சத்து 50 ஆயிரத்து 400 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. ஆனி மேரி ஸ்வர்ணா, இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.






## பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 28.08.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பல்வேறு அரசு துறைகளின் மூலம் 987 பயனாளிகளுக்கு ரூ.20 கோடியே 85 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன், ஆட்சியர் அலுவலகத்தில் அரசு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியையும் பார்வையிட்டு, அங்கு அரங்கு அமைத்திருந்த சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கே. கற்பகம், இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்






### கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து 29.08.2023 அன்று நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 909 பயனாளிகளுக்கு ரூ.15 கோடியே 5 லட்சத்து 10 ஆயிரத்து 397 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். முன்னதாக ஆட்சியர் அலுவலகத்தில் அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியையும் பார்வையிட்டு, அங்கு அரங்கு அமைத்திருந்த சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஏ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 04.09.2023 அன்று நடைபெற்ற அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 115 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 37 லட்சத்து 69 ஆயிரத்து 386 மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. செந்தில் ராஜ், இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

















# மகளிர் திட்டத்தின் இரண்டாண்டு சாதனை விளக்க கண்காட்சி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி

தென்காசி மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற, தமிழ்நாடு அரசின் கடந்த இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கும் சாதனை விளக்க கண்காட்சி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியினை 05.09.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை ரவிச்சந்திரன், இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் (பொ) திரு. மைக்கேல் ஆண்டனி பெர்னாண்டோ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் 12 மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்கள் உற்பத்திப் பொருட்களான பிரம்பு நாற்காலிகள், பாய்கள், மஞ்சள் பை, மண்பாண்டம், சிறுதானிய உணவுகள், கைத்தறி சேலைகள் உள்ளிட்டவைகளை விற்பனை செய்தனர். நிகழ்ச்சியில் 419 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.34 கோடி வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினருடனும் கலந்துரையாடி, அவர்களது உற்பத்தி மற்றும் விற்பனை உள்ளிட்டவைகள் குறித்து கேட்டறிந்ததுடன், பாய் முனைந்த மாற்றுத் திறனாளி மகளிர் குழு உறுப்பினருக்கு ரூ.50 ஆயிரம் கடனுதவியை அங்கேயே வழங்கினார்கள்.















# மதி சிறுதானிய சிற்றுண்டியகம் திறப்பு

**மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி திறப்பு, சிறுதானிய உணவு செயல்முறை கையேடுகள் வெளியிடுதல் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி நடப்பாண்டு நிதிநிலையறிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், "அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சிறுதானிய உணவகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.09.2023 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சுய உதவிக் குழுவினரின் 'மதி' சிறுதானிய சிற்றுண்டியகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்ட அரசு கலைக் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற சிறுதானிய திருவிழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியைத் திறந்து வைத்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சிறுதானிய பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டு, சிறுதானிய உணவு செயல்முறைகள் குறித்த கையேடுகளையும் வெளியிட்டதுடன், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து துறை சார்பில் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் 24.09.2023 அன்று நடைபெற்றது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு துறைகள் சார்பில் 3,293 பயனாளிகளுக்கு ரூ.41 கோடியே 54 லட்சத்து 41 ஆயிரத்து 516 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியதுடன், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுத் துறை சார்பாக, பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் தடுக்கும் பொருட்டு, மஞ்சப்பை விழிப்புணர்வை தொடங்கி வைத்து பொதுமக்கள் மற்றும் அரசு துறை அலுவலர்களுக்கு மஞ்சப்பைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஷ் அகமது, இ.ஆ.ப., நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.எம்.சரயு, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.









# மின்சார வாகனங்கள் வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக பயனாளிகளுடன் கலந்தாய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாகனங்கள் மூலம் விற்பனை செய்திட ஏதுவாக சுய உதவிக் குழுக்களுக்கு மின்சார வாகனங்கள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை இணைந்து மகளிர் சுய உதவிக் குழுவினர் பயன்பெறும் வகையில் 50 மின்சார வாகனங்கள் வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக பயனாளிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் 22.09.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.



சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சிறப்பு செயலாளர் திரு. அனுராக் மிஸ்ரா, இ.வ.ப., அவர்கள், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் டாக்டர் எம். ஜெயந்தி, இ.வ.ப., அவர்கள், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை இயக்குநர் திரு. தீபக் எஸ். பில்கி, இ.வ.ப., ஆகியோர் மின்சார வாகனங்கள் வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக பயனாளிகளுடன் கலந்தாய்வு மேற்கொண்டனர். இந்தக் கலந்தாய்வில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர், பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், சமுதாய அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.







# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் 13.09.2023 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



# “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்பு







தந்தைப் பெரியார் அவர்களின் பிறந்த நாளை (17.09.2023) முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 15.09.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவி குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களை கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவில் சாராஸ் கண்காட்சிகள் வாயிலாக விற்பனை செய்வதற்கு ஏதுவாக பல்வேறு விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் ஏராளமான மகளிர் சுய உதவி குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் மகளிர் சுய உதவி குழுவினருக்கு உரிய விலை கிடைப்பதோடு, வாடிக்கையாளர்களும் தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற முடிகிறது.

அதன் ஒரு பகுதியாக சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் பொருட்களின் இயற்கை வார சந்தை மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

மாதந்தோறும் முதல் மற்றும் மூன்றாம் வார சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இயற்கை வாரச் சந்தையில், சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்த பொருட்களான உடலுக்கு நன்மை தரும் சிறுதானியங்கள், பசுமையான காய்கறிகள், சுவை மிகுந்த பழங்கள், ஆரோக்கியம் தரும் எண்ணெய் வகைகள், ருசி மிகுந்த ஊறுகாய்கள், பாரம்பரிய சுவை நிறைந்த உணவுப் பொருட்கள், சுற்றுச்சுழலைக் காக்கும் துணி மற்றும் சணல் பைகள், இயற்கை உரமிட்டு உருவாக்கிய விதைகள், செடிகள் மற்றும் தரமான உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் பாரம்பரியமும், சுவையும் நிறைந்த உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவு அரங்கும் இயற்கை வாரச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ளது.

காலை 07.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் இயற்கை வாரச் சந்தைக்கு அனுமதி இலவசம். இத்தகைய சிறப்பு மிகுந்த இயற்கை வாரச் சந்தைக்கு அனைவரும் வருகை தந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயற்கை முறையில் உற்பத்தி செய்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பிளாஸ்டிக் உபயோகத்தைத் தவிர்த்திட, பைகள் மற்றும் எண்ணெய் கொள்கலன்களைக் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.











# பாலின வள மையம் "வானவில் மையம்"

## அறிமுகம்

பாலின வள மையமானது வட்டார அளவில் அர்ப்பணிப்புடன் கூடிய நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது வட்டார அளவிலான கூட்டமைப்பிலிருந்து நேரடியாக வரும் அல்லது அதிகரிக்கும் வழக்குகளுக்குப் பதிலளிக்கும் வகையில், நிர்வாகங்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடனான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, பாலின சமத்துவத்திற்கு எதிரான வழக்குகளுக்கான பதில் மற்றும் நிவர்த்தி செய்யும் வழிமுறைகளைப் பெருக்குவதற்கு நிலை நிறுத்தப்படும் அமைப்பாகும். இது பெண்கள் மற்றும் வட்டார அளவில் பாதிக்கப்பட்டவர்களின் காரணத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், வாதிடுவதற்கும் மற்றும் உரையாற்றுவதற்கும் ஒரு பிரத்யேக அமைப்பாக இருக்கும்.

## நோக்கம்

சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எழுப்பவும், சேவை வழங்குநர்கள் மற்றும் அரசு துறைகளுடன் இணைந்து செயல்படவும், பெண்கள் மற்றும் சமூகத்தின் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு வழிவகுக்கும் சமூகத் தடைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் பாலின மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமூக நிறுவனங்களின் தற்போதைய பணியை உறுதி செய்திடவும், பாதிக்கப்பட்டவர்களின் காரணத்தை ஆதரிப்பதன் மூலம் மற்றும் கூட்டு நடவடிக்கைகளின் வலிமையை வலியுறுத்துவதன் மூலம் கொள்கை அளவிலான மாற்றங்களை ஏற்படுத்தப்பட உள்ளது.

உரிமைகள், மருத்துவம், உளவியல், சட்டம், தங்குமிடம், மறுவாழ்வு மற்றும் பிற ஆலோசனை ஆதரவு போன்றவற்றை ஒரே குடையின் கீழ் கிராமப்புற பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு ஒருங்கிணைந்த ஆதரவு, சேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது.

2022-2023 ஆண்டில் தேசிய ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்ட கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் முன்மாதிரியாக 10 பாலின மையங்கள் காட்டுமன்னார் கோயில், விருதாச்சலம், அம்மாப்பேட்டை, அந்தியூர், அயோத்தியாப்பட்டிணம், கெங்கவல்லி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மண்ணச்சநல்லூர் மற்றும் தொட்டியம் என 10 வட்டாரங்களில் பாலின வள மையம் (வானவில் மையம்) அமைக்கப்பட்டு மேற்காணும் சேவைகளை வழங்கி மகளிர் நலன் காக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வட்டார மேலாண்மை அலகிற்கு அருகாமையில் அனைவரும் எளிதில் அணுகக் கூடிய வகையில் பாலின மையங்கள் (வானவில் மையம்) நிறுவப்பட்டு உள்ளன.



அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சமூக செயல்பாட்டுக் குழுக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் வட்டாரத்தில் 3 புகார்கள் வரப் பெற்று நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் குறித்தான குடும்ப வன்முறை, வரதட்சணை கொடுமை, குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, வளர் இளம் பெண்களுக்கு ஏற்படும் தொந்தரவுகள், அதிகமான புகார்கள் பதிவாகியுள்ள புள்ளி விவரத்தின் அடிப்படையில் வட்டாரத்தில் பாலின மையங்கள் (வானவில் மையம்) அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும் முன்மாதிரி செயல்பாட்டினை தொடர்ந்து 2023-2024 ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் அறிவிப்பு எண் 15-ன் படி அனைத்து மாவட்டங்களிலும் பாலின மையங்கள் (வானவில் மையம்) அமைக்க ரூ 1.50 இலட்சமும், ஓராண்டு பராமரிப்பு செலவினங்களுக்கு ரூ.1.50 இலட்சமும் என 37 மாவட்டங்களுக்கும் தலா ரூ.3.00 இலட்சம் என மொத்தம் ரூ1.11 கோடி நிதி விடுவிக்கப்பட்டு வானவில் மையம் அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செப்டம்பர் 10ந் தேதிக்குள் அனைத்து மாவட்டங்களிலும் பாலினவள மையங்கள் 37 வட்டாரங்களிலும் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாலின வள மையம் பெண்களுக்கு நேரடி மற்றும் பரிந்துரை ஆகிய இரண்டு வகையான சேவைகளை வழங்கும். உதவி கோரும் நபருக்கு தொடர்புடைய அனைத்து விஷயங்களிலும் தகவலை வழங்கும். எப்ஐஆர் (FIR) / டிஐஆர் (TIR) / என்சிஆர் (NCR) பதிவு செய்தல் அல்லது தகுந்த நீதித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதை எளிதாக்குதல் போன்ற நிவர்த்தி தேடும் செயல்முறையின் மூலம் பாதிக்கப்பட்டவர்களை கையாளப்பட உள்ளது.

சேவை வழங்குநர்களுடன் கூட்டாக நேரக் கட்டுப்பாடு மற்றும் பயனுள்ள பரிந்துரை வழிமுறைகளை உறுதி செய்யும். சட்டக் கல்வியறிவு மற்றும் உரிமைகள் மற்றும் உரிமை முகாம்களை நடத்துவது, பாதிக்கப்பட்ட நபரை சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இணைக்கப்படும்.

வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு அடிப்படை ஆலோசனை சேவைகளை வழங்கி, காவல்துறை, மருத்துவமனைகள், ஆலோசகர்கள், ஓரிட சேவை மையம் மற்றும் வழக்கறிஞர் ஆகியோருடன் இணைத்து அவர்களுக்கான நிவாரணம் மற்றும் அரசுத் திட்டங்கள், வாழ்வாதார திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படும் ஓரிட சேவை மையத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி செயல்பட உள்ளது.

உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், தன் சுத்தம், மன நலத் திட்டம், மாதவிடாய் கால சுகாதார மேலாண்மை, போன்றவற்றை ஒருங்கிணைப்பது மற்றும் இத்தலைப்புகளில் பயிற்சிகள் வழங்குவது ஆகியனவாகும்.

பாலின மையத்தை நிர்வகிக்க மேலாளர் நியமிக்கப்பட்டு உள்ளனர். மேலாளர் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருக்க வேண்டும். குடும்ப வன்முறைகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை அடையாளம் கண்டு அதனை களைய முற்படுபவராக இருத்தல் வேண்டும்.








# சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்புத் திட்டம்

சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களின் நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிப்பது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். சுய உதவிக் குழுக்களுக்கான கடன் பெறும் உரிமை என்பது, எளிதாக கடன் நிறுவனங்களை அணுகுவது, சரியான நேரத்தில், தேவைக்கேற்ப குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுவது ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

இத்திட்டம் தொடர்பான இலக்கீடு, ஒவ்வொரு சுய உதவிக்குழு வாரியாக குழு உறுப்பினர்களின் குடும்ப வருமானம், செலவினம். சேமிப்பு பற்றாக்குறை மற்றும் கடன் தேவை விவரங்களைப் பட்டியலிட்டு குடும்ப வாரியாக தயார் செய்யப்பட்டு தொகுக்கப்படும் நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு நுண்கடன் திட்டம் தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில், கடந்த ஆண்டு (2022-2023) ரூ.25,000 கோடி இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு 31.03.2023 தேதியில் ரூ.25,642.01 கோடி, 4,49,209 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக பெற்று வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.30,000 கோடி இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுவருகிறது.

வங்கிக் கடன் இணைப்பு மூலம் பயன்பெற சுய உதவிக் குழுக்கள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருப்பது அவசியமாகும்.

அ. குழு வங்கிக் கணக்கு துவங்கி 6 மாதங்கள் நிறைவடைதல்

ஆ. குழுக்கூட்டம், சேமிப்பு, உள்கடன் வழங்குதல், கடன் திருப்பம் மற்றும் முறையான பதிவேடுகள் பராமரிப்பு

இ. தர மதிப்பீட்டில் தேர்ச்சி அடைதல்

இவ்வாறு தகுதி வாய்ந்த சுய உதவிக் குழுக்கள் வங்கியில் உரிய காலத்தில் கடன் வேண்டி விண்ணப்பிக்கும் பட்சத்தில், அளிக்கப்படும் கடன்கள், தவணைக் கடன்களாகவோ, ரொக்கக்கடன்களாகவோ அளிக்கப்படும்.



### சுய உதவிக் குழு வங்கி நேரடிக் கடன் அளவு மற்றும் தகுதிகள்

| அளவை | கடன் அளவு | தகுதி | தவணை |
|---|---|---|---|
| முதல் கடன் இணைப்பு | குழு சேமிப்புத் தொகையில் 6 மடங்கு அல்லது குறைந்தபட்சம் ரூ.1.50 இலட்சம் இதில் எது அதிகமோ அத்தொகை | தர மதிப்பீட்டில் தேர்ச்சி | 24 - 36 மாதங்கள் |
| இரண்டாவது கடன் இணைப்பு | குழு சேமிப்புத் தொகையில் 8 மடங்கு அல்லது குறைந்தபட்சம் ரூ.3.00 இலட்சம் இதில் எது அதிகமோ அத்தொகை | தர மதிப்பீட்டில் தேர்ச்சி மற்றும் முறையான கடன் திருப்பம் | 36 - 48 மாதங்கள் |
| மூன்றாவது கடன் இணைப்பு | குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் கூட்டமைப்பால் மதிப்பீடு செய்யப்பட்ட குழுவின் நுண்கடன் திட்டம் அடிப்படையில்) | தர மதிப்பீட்டில் தேர்ச்சி மற்றும் முறையான கடன் திருப்பம் | 48 - 60 மாதங்கள் |
| நான்காவது கடன் இணைப்பு | ரூ.6.00 இலட்சத்திற்கு மேல் (குழுவின் நுண்கடன் திட்டம் அடிப்படையில்) | தர மதிப்பீட்டில் தேர்ச்சி மற்றும் முறையான கடன் திருப்பம் | 60 - 84 மாதங்கள் |

### வட்டி மானியம்:

- மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் இணைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டுமே இவ்வட்டி மானியம் பெற தகுதியுடையவர்
- குழு பெறும் கடன்களில் ரூ.3.00 இலட்சம் வரையிலான தொகைக்கு 7 வட்டியில் வங்கிகளால் கடன் வழங்கப்படும்.
- மேலும் ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன் தொகைக்கு 10 வட்டி விகிதத்தில் வங்கியில் கடன் வழங்கும்.
- கடன் வழங்கிய பின்னர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைச்சகத்திலிருந்து (MoRD) வங்கிகள் நேரடியாக வட்டி மானியத் தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

# பெண்களைத் தாக்கும் எலும்புப் புரை நோய்

ஒரு வீட்டில் பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால் தான், அந்த வீடு ஆரோக்கியமாக இருக்கும். பெண்கள் 30-40 வயதை தாண்டிவிட்டால், அவர்களின் உடலில் பல்வேறு பிரச்சனைகள் வரத் தொடங்கும். குடும்பம் மற்றும் குழந்தைகளின் மீது அதிக அக்கறை காட்டும் பெண்கள், தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனத்தை செலுத்த தவறுகிறார்கள். இதனால் உடல் மற்றும் மன ரீதியாக தங்களை அறியாமலேயே பாதிக்கப்பட்டு, குறிப்பிட்ட நோய்களின் அபாயத்திற்கு அதிகம் ஆளாகிறார்கள். மாதவிடாய் முடிவடையும் வயதை அடைந்த பெண்களுக்கு எலும்புப் புரை நோய் தாக்கும் அபாயம் அதிகமாக உள்ளது.

இந்நோய் குறித்து மருத்துவர்கள் கூறுகையில், "மாதவிடாய் முடிவடையும் வயதை அடைந்த பிறகு, பெண்களின் உடலில் சில ஹார்மோன் மாற்றங்கள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக அவர்களுக்கு எலும்புப் புரை நோய் தாக்கும் அபாயம் அதிகமாக உள்ளது. ஆனால் இது மட்டுமே காரணம் என்று நாம் கூறிவிட முடியாது. வேறு சில காரணங்களும் இருக்கின்றன. எலும்பு வளர்ச்சி அடைவது என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. இது 40-45 வயதிற்கு மேல் குறையத் தொடங்குகிறது. அதன் பிறகு புதிய எலும்புகள் உருவாவதற்கு பதிலாக எலும்பு முறிவுகள் அதிகரிக்க தொடங்குகின்றன. ஆகவே 25 முதல் 45 வயது வரையில் நமது வாழ்க்கை முறையை சுறுசுறுப்பாக வைத்துக் கொண்டால், வயதான காலத்தில் எலும்புப்புரை நோய் வருவதிலிருந்து தப்பிக்கலாம்" என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

எலும்புப் புரை நோயின் தாக்குதலில் இருந்து காத்துக் கொள்ள பெண்கள் கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

### உணவுப் பழக்கங்கள்

புதிய எலும்புகள் உருவாவதற்கு சிறந்த டயட் மிகவும் அவசியம். சீரற்ற உணவு பழக்கம், ஜங்க் உணவுகளை அதிகமாக சாப்பிடுவது, கா..பி, டீ போன்ற பானங்களை அதிகமாக குடிப்பது, கால்சியம் குறைவான உணவுகளை எடுத்துக் கொள்வது மற்றும் விட்டமின்-டி குறைபாடு ஆகியவை எலும்புப் புரை நோய் தாக்கும் அபாயத்தை அதிகரிக்கும். பெண்கள் தங்கள் டயட்டில் சோயா பீன்ஸை சேர்த்துக் கொள்வது நல்லது.

### மன அழுத்தம்

எலும்புகளின் வளர்ச்சியில் நம் மன அமைதியும் முக்கிய பங்கு வகிக்கிறது. தூக்கமின்மை மற்றும் மன அழுத்தம் அதிகரிக்கும் போது எலும்புகளில் இப்பிரச்சனை ஏற்படுகிறது. ஆகவே உங்கள் மனதை அமைதிப்படுத்தக் கூடிய யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை கடைப்பிடியுங்கள்.

### குறைவான ஈஸ்ட்ரோஜன்

மாதவிடாய் முடிவடைந்த பெண்களுக்கு மார்பக புற்றுநோய் இருந்து, அதற்கான சிகிச்சையை எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு குறைவான ஈஸ்ட்ரோஜனே இருக்கும். ஆகையால் எலும்புப்புரை நோய் இவர்களை எளிதாக தாக்கும். இவர்களுக்கு சில ஹார்மோன் சிகிச்சைகள் தேவைப்படும்.

ஆகையால், சிறந்த உணவுப் பழக்கம், ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான வாழ்க்கை முறை, சூரிய ஒளி உடலில் படுமாறு நடைப்பயிற்சி, மன அமைதி போன்றவை இருந்தால் எலும்புப்புரை நோய் வராமல் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.



## பீடி சுற்றும் தொழில் செய்த பெண்கள் வாழை நார் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனம் தொடங்கிய வெற்றிக் கதை

திருநெல்வேலி மாவட்டம், கோடகநல்லூர் கிராமத்தில் பெரும்பாலான பெண்கள் பீடி சுற்றும் வேலையில் ஈடுபட்டு வந்தனர். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு தினசரி ஊதியமாக வெறும் 100/- ரூபாய் அல்லது 150/- ரூபாய் மட்டுமே கிடைத்தது. 10 மணி நேரத்துக்கும் மேலாக குனிந்தபடி உட்காருதல் மற்றும் புகையிலை தூசி நுகர்வு காரணமாக, அவர்கள் கழுத்து வலி, முதுகு வலி, காசநோய் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வந்தனர்.

அவர்களுக்கு மாற்றுத் தொழிலாகவும், சுய வேலைவாய்ப்பாகவும் வாழை நார் உற்பத்தியாளர் அமைப்பினை உருவாக்க, மகளிர் திட்டம் வழிகாட்டியது. தொடர்ந்து, சுய உதவிக் குழுவில் உள்ள 80 உறுப்பினர்கள் வாழைநார் பொருட்கள் உற்பத்திக்கான பயிற்சியில் சேர்ந்தார்கள். ஏழை குடும்பப் பின்னணி கொண்ட இவர்கள், குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு படித்தவர்கள்.



2021 ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில், “திருமதி வாழைநார் உற்பத்தியாளர் நிறுவனம்” ஆரம்பிக்கப்பட்டு, ரூர்பன் திட்டத்தின் கீழ் தொழிற்கூடம் கட்டித் தரப்பட்டது. வீணாகும் வாழைநார் கழிவுகளைக் கொண்டு ஏற்றுமதி தரத்திலான வீட்டு உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்திட பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், தனியார் நிறுவனத்தின் வாயிலாக ஏற்றுமதி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

இவர்கள் ஒவ்வொரு மாதமும் வாழை நாரில் செய்யப்பட்ட ரூபாய் 6,00,000/- மதிப்புள்ள 10,000 கூடைகளையும், 2000 லேம்ப் ஷேடுகளையும் உற்பத்தி செய்து தனியார் நிறுவனம் மூலம் ஏற்றுமதி செய்கிறார்கள். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும் வாங்கிய கடன்களை முறையாக திருப்பிச் செலுத்துகிறார்கள்.

இந்த மதிப்புமிக்க வேலையில், ஒவ்வொரு பெண் உறுப்பினரும் ஒரு நாளைக்கு ரூ.300/- வரை வருவாய் பெறுகிறார்கள். இங்கு பணிபுரியும் அனைத்து உறுப்பினர்களுக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்பட்டுள்ளது. PMJJBY, PMSBY ஆகிய காப்பீட்டுத் திட்டங்களின் நன்மைகள் குறித்து அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் இந்தத் திட்டங்களில் சேர்ந்துள்ளனர். PF மற்றும் ESI நன்மைகள் இங்குள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளைப் பற்றி கேள்விப்பட்டு, வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் இங்கு வருகை தருகிறார்கள். அவர்கள், இங்கு பணியாற்றும் பெண்களிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள். இங்கு வருகை தரும் சில பெண் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தங்கள் பகுதியில் இதேபோன்ற ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இத்தகையவர்களுக்கு பரிந்துரைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

திருமதி வாழை நார் உற்பத்தி நிறுவனத்தின் முன்னணி உறுப்பினரான மதிவாணி கூறும்போது, "ஒற்றுமையின் வலிமையை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எங்கள் திருமதி வாழை நார் உற்பத்தி நிறுவனத்தை இந்தியாவின் நம்பர் ஒன் வாழை நார் தயாரிப்பு நிறுவனமாக மாற்றுவதே எங்கள் லட்சியம்" என்று குறிப்பிட்டார்.

தங்களுக்கு வழிகாட்டி உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு திருமதி வாழை நார் உற்பத்தியாளர் அமைப்பின் உறுப்பினர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வாழ்வை வளமாக்கிய கோரைப்பெட்டி தொழில்

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் வட்டாரம், சின்னதும்பூர் ஊராட்சிக்குட்பட்ட கிராமத்து மேடு குக்கிராமத்தில் வளர்நிலா மகளிர் சுய உதவிக் குழு கடந்த 21 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களும் சேர்ந்து கோரைப்பெட்டி முடைதல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் குழுவினர் சின்னத்தும்பூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலமாக சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ. 50,000/-மும், வங்கி கடனாக ரூ.2,00,000/- பெற்று அதிக அளவில் கோரைப்பெட்டிகளை தயாரித்து அருகாமையில் உள்ள சந்தையில் விற்பனை செய்கின்றனர். வியாபாரிகளும் நேரில் வந்து வாங்கி செல்கிறார்கள். இக்குழுவினருக்கு ஒரு மாதத்திற்கு குறைந்த பட்சம் ரூ. 25,000/- வரை வருமானம் கிடைக்கிறது. வாங்கிய கடன்களையும் வட்டியுடன் திரும்ப செலுத்தி விட்டனர். தங்களுக்கு இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த மகளிர் திட்டத்திற்கு வளர்நிலா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## DDU- GKY பயிற்சியின் மூலம் பெற்ற வாழ்வாதாரம்



திண்டுக்கல் மாவட்டம், கோதைமங்கலம் ஊராட்சியில் உள்ள கொத்தனார் காலனியில் வசித்து வரும் எனது பெயர் பாலசுப்பிரமணி (த/பெ. துரைசாமி) மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த நான் மேல்நிலைக்கல்விக்கு பின் உயர்கல்வி தொடர முடியாத நிலையில் இருந்தேன். இந்நிலையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம் பற்றி எங்கள் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் அறிந்துகொண்டேன். எங்கள் கிராமத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் ஆலோசனையின் அடிப்படையில் Coimbatore Welfare Association பயிற்சி மையத்தில் சேர்ந்து Ware house Supervisor பயிற்சியினை பெற்றேன்.

பயிற்சி காலத்தில் தங்கும் விடுதி, உணவு, சீருடை, கற்றல் உபகரணங்கள் அனைத்தும் எனக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இப்பயிற்சியின்போது Soft skills, Information Technology, English, Logistics பற்றி கற்பித்தல் மூலமாகவும் செயல்முறை பயிற்சி மூலமாகவும் கற்றுக் கொண்டேன்.

கிராமப்புறம் பின்னணியில் வளர்ந்த எனக்கு இப்பயிற்சியின்போது அதிகமான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை கற்றுக்கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. பயிற்சியில் கிடைத்த திறன்கள் அடிப்படையில் நேர்காணலில் தேர்வு செய்யப்பட்டு கோயமுத்தூர் அமேசான் நிறுவனத்தில் ரூ.15,000/- ஊதியத்தில் பணிஅமர்வு செய்யப்பெற்றேன்.

மிகவும் பின்தங்கிய ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த எனக்கு பயிற்சி வழங்கி, பணிவாய்ப்பும் பெற்றுத்தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் DDU GKY திட்டத்திற்கு எனது இதயப்பூர்வமான நன்றியினை உரித்தாக்குகிறேன்.

**– து. பாலசுப்பிரமணி,**
கோதைமங்கலம், திண்டுக்கல் மாவட்டம்.

# குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது இந்திய நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் பல சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களைப் பற்றியும், அவற்றின் முக்கிய அம்சங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில் இனி மாதந்தோறும் முற்றம் இதழில் சட்டங்கள் குறித்த தொடர் இடம் பெறுகிறது.

### குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006

முந்தைய சட்டங்களில் இருந்த குறைபாடுகளை சரி செய்வதற்காக, 2006ஆம் ஆண்டு குழந்தைத் திருமண தடைச் சட்டத்தின் விதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. அது, 1929 ஆம் ஆண்டு குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக, நவம்பர் 1, 2007 இல் நடைமுறைக்கு வந்தது. 1978 ஆம் ஆண்டு இந்த சட்டத்தில் பெண்களின் சட்டப்பூர்வ திருமண வயதை 15 இல் இருந்து 18 வயதாகவும், ஆண்களுக்கு 18 இல் இருந்து 21 வயதாகவும் உயர்த்துகின்ற திருத்தம் செய்யப்பட்டது.

பெண் அல்லது பையனுக்கு சட்டப்பூர்வ வயதை விடக் குறைவாக, அதாவது பெண்ணுக்கு 18 வயதுக்கு கீழ் அல்லது பையனுக்கு 21 வயதுக்குக் கீழ் உள்ள திருமணத்தை, குழந்தைத் திருமணம் என குழந்தைத் திருமண தடைச் சட்டம் வரையறுக்கிறது. இந்த சட்டத்தின் விதிகள் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கின்றன. பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பையும், நிவாரணத்தையும் வழங்குகின்றன. மேலும் அத்தகைய திருமணத்துக்கு உடந்தையாக இருக்கின்ற, ஊக்குவிக்கின்ற அல்லது நடத்தி வைப்பவர்களுக்கான தண்டனையை அதிகரிக்கின்றன.

### இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- திருமணம் நடைபெறும் சமயத்தில் குழந்தையாக இருந்த திருமணத்தின் ஒரு ஒப்பந்த தரப்பு மட்டுமே, ரத்து செய்கின்ற உத்தரவு மூலம் அந்த குழந்தைத் திருமணத்தை ரத்து செய்வதற்கான மனுவை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.
- மனு தாக்கல் செய்யும் நேரத்தில், அந்த மனுதாரர் ஒரு மைனராக இருந்தால், குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியிடம் அவருடைய பாதுகாவலர் அல்லது அவருடைய பிரதிநிதியால் மனு தாக்கல் செய்யப்படலாம்.
- இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்படும் மனுவை எந்த நேரத்திலும், ஆனால் மனுவைத் தாக்கல் செய்கின்ற குழந்தை மேஜர் ஆகி இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவற்கு முன்பாகத் தாக்கல் செய்யலாம்.
- இந்தப் பிரிவின் கீழ் ஒரு ரத்து செய்யும் உத்தரவை வழங்கும் வேளையில், மாவட்ட நீதிமன்றம் மற்றொரு தரப்புக்கு, அவருடைய பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு, ஒருவேளை இருக்கும் பட்சத்தில், அடுத்த தரப்பிடம் இருந்து திருமணம் நடைபெறும் சமயத்தில் அவர்கள் பெற்றுக் கொண்ட பணம், விலையுர்ந்த பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் பிற பரிசுப் பொருட்களை அல்லது அந்த விலையுயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள், பிற பரிசுப்பொருட்கள் மற்றும் பணத்துக்கு இணையான தொகையைத் திருப்பிக் கொடுக்குமாறு, அந்த திருமணத்தின் இரண்டு தரப்பு அல்லது அவர்களின் பெற்றோர் அல்லது அவர்களுடைய பாதுகாவலர்களுக்கு அறிவுறுத்துகின்ற ஆணையைப் பிறப்பிக்கும்.
- குழந்தைத் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்ற 18 வயதுக்கு மேற்பட்ட ஆணாக உள்ள ஒருவருக்கு இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய சிறைத்தண்டனையுடன் கடுங்காவல், அல்லது ஒரு இலட்சம் ருபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
- எந்த ஒரு குழந்தைத் திருமணத்தை செய்து கொள்கின்ற, நடத்துகின்ற, வழிநடத்துகின்ற அல்லது உடந்தையாக இருக்கும் நபருக்கு, அந்தத் திருமணம் ஒரு குழந்தைத் திருமணம் அல்ல என அவர் நினைத்தார் என்பதற்கான காரணங்களை அவர் நிரூபிக்கத் தவறும் பட்சத்தில், இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய கடுங்காவல் தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ருபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.
- குழந்தைத் திருமணத்தில் ஒரு குழந்தை ஈடுபடும் போது, அந்தத் திருமணத்தை ஊக்குவிக்கின்ற அல்லது அந்தச் சடங்கு நடைபெற அனுமதிக்கின்ற, அல்லது குழந்தைத் திருமணத்தில் கலந்து கொள்ளுதல் அல்லது பங்கெடுத்தல் உள்ளிட்ட வேண்டுமென்றே அதைத் தடுக்கத் தவறுகின்ற, பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர் அல்லது வேறு ஏதேனும் நபர் அல்லது வேறு ஏதேனும் நிலை, சட்டரீதியாக அல்லது சட்டத்துக்கு முரணாக, ஒரு நிறுவனத்தின் உறுப்பினர் எவரேனும் அல்லது நபர்களின் சங்கம் உள்ளிட்ட குழந்தை மீது அதிகாரம் கொண்ட எந்த ஒரு நபருக்கும், இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய கடுங்காவல் தண்டனையும், மேலும் ஒரு இலட்ச ரூபாய் வரை அதிகரிக்கக் கூடிய அபராதமும் விதிக்கப்படும்.

ஆதாரம் - தமிழ்நாடு
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

# வணிகம் வளர்க...

## திருச்சிராப்பள்ளி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| அல் அமீன் மகளிர் சுய உதவிக் குழு<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>கைபேசி : 85268 91186 | சிறுதானிய தின்பண்டங்கள் |  |
| பாரத மாதா மகளிர் சுய உதவிக் குழு,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>கைபேசி : 63838 50622 | செயற்கை ஆபரணங்கள் |  |
| இதயம் மகளிர் சுய உதவிக் குழு,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>கைபேசி : 94861 40941 | சிறுதானிய சத்து மாவு |  |
| ஸ்டார் மகளிர் சுய உதவிக் குழு,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>கைபேசி : 90035 63937 | சீகக்காய் பொடி வகைகள் |  |
| ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவிக் குழு,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>கைபேசி : 99409 13815 | தரமான தேன் |  |

# பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய இயக்கம்

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 32வது வார்டில் அம்மன் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவானது இப்பகுதியில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, மிகவும் ஏழை மக்களை கொண்டு 01.12.2019 அன்று தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் குழுவான இணைந்து செயல்படுவதற்கு முன் வீட்டு வேலை, கட்டிட வேலை மற்றும் அவ்வப்போது கிடைக்கும் சிறு சிறு கூலி வேலைகளை செய்து வந்தனர். குழுவில் சேர்ந்த பிறகு உறுப்பினர்கள் அனைவரும் மாதந்தோறும் சேமிப்பு தொகையினை பேங்க் ஆப் பரோடாவில் செலுத்தி வந்தனர்.

இக்குழுவின் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கீரமங்கலத்தில் கால்மிதியடி தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலக கட்டிடத்தில் ஒரு அறையினை வாடகைக்கு எடுத்து மிதியடி தயாரிக்கும் இயந்திரத்தின் மூலம் மிதியடி தயாரித்து, ஒரு மிதியடியினை ரூ.40/- முதல் ரூ.150/- வரை விற்பனை செய்து வருகின்றனர். தாங்கள் உற்பத்தி செய்யும் மிதியடியினை உள்ளூர் கடைகளுக்கு மொத்தமாக விற்பனைக்கு வழங்குவதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விற்பனை செய்தல் மற்றும் நேரடி விற்பனை செய்தல் ஆகிய வழிகளிலும் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

மேலும் அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவுடன் இணைந்து கோமதி அம்மன், கமலி மற்றும் நேசம் ஆகிய மூன்று குழுவில் உள்ள பட்டியலின சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இணைந்து செயற்கை மலர்கள் விற்பனையும் செய்து வருகின்றனர். இதற்கு முதலீடாக சமுதாய அமைப்பாளர்கள் மூலம் வங்கி கடன் இணைப்பாக ரூ.4.80 இலட்சம் அவர்களுக்கு பெற்று வழங்கப்பட்டது. 10 நபர்கள் இணைந்து செயற்கை மலர்களில் பூமாலை, நிலை தோரணம், பூ ஜாடி, பூங்கொத்து ஆகியவற்றை தயார் செய்து ரூ.30/- முதல் ரூ.500/- வரையிலான விலையில் உள்ளூரில் விற்பனை செய்வதுடன், கடைகளுக்கும் ஆர்டரின் பெயரில் மொத்தமாக விற்பனை செய்து வருவதுடன், வேளாங்கண்ணி மற்றும் திருச்சி உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கும் அனுப்பி வருகின்றனர். தங்களின் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை பெங்களூர் மற்றும் திருச்சியிலிருந்து கொள்முதல் செய்து வருகின்றனர்.

இந்தத் தொழில் மூலம் ஒவ்வொருவரும் ரூ.6,000/- வரை மாத வருமானமாக ஈட்டி வருகின்றனர். இவர்கள் செய்யும் தொழிலை ஆய்வு செய்து பூமாலை வணிக வளாகத்தில் இவர்களுக்கு ஒரு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்தொழிலை விரிவுபடுத்துவதற்கு பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து பெருங்கடனாக ரூ.25 இலட்சம் வழங்க பரிந்துரை செய்து வங்கியில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அம்மன், கோமதி அம்மன், கமலி மற்றும் நேசம் ஆகிய சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## மகிழ்ச்சியும் வளர்ச்சியும் தந்த நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

ஈரோடு மாவட்டம், சலங்கபாளையம் பேரூராட்சியில் செயல்பட்டு வரும் ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவின் வெற்றி குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, ஏழ்மை நிலையிலிருந்த நாங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவினை துவங்கினோம். நாங்கள் ஆரம்பத்தில் கூலிவேலை செய்து சேமிப்பு செலுத்தியும், எங்களது தேவைக்காகாக வட்டிக்கு கடன் வாங்கி வந்த நிலையில் எங்களது சேமிப்புத் தொகையினை உள்கடனாக எடுத்து பயன்படுத்திவந்தோம்.

ஏதாவது தொழில் துவங்க வேண்டும் என தீர்மானித்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ.8 இலட்சம் கடன்பெற்று,நாங்கள் 6 நபர்கள் இணைந்து தேங்காய், நிலக்கடலைப் பருப்பு வாங்கி மரச்செக்கு போட்டு எண்ணை ஆட்டி விற்பனை செய்து வருகிறோம். மேலும் நாட்டுச்சர்க்கரை, குளியல் சோப்பு என மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்து விற்கும் பொருட்களை வாங்கியும் விற்பனை செய்து வருகிறோம். குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் கால்நடை வளர்ப்பு, தறி நெய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர்.

தற்போது எங்களது பொருளாதாரம் மேலோங்கி நிற்கிறது.



## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி...

என் பெயர் நூருநிஷா, திருவண்ணாமலை முகல் புறா தெருவில் வசித்து வரும் நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வேலையும் இல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர்களின் வாயிலாகவும், செய்தித்தாள் விளம்பரம் மூலமாகவும் CCTV பொருத்தும் பணிகளுக்கான (CCTV INSTALITION TECHNICIAN) பயிற்சி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக இலவசமாக வழங்கப்படுவதாக அறிந்து, பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து 3 மாதம் பயிற்சி பெற்றேன். பயிற்சியில் CCTV கேமராக்களின் வகைகள், DVR-ல் அதை எவ்வாறு பொருத்துவது என்பது குறித்து விரிவாக கற்றுக் கொடுக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் அரசின் சார்பில் எழுத்து தேர்வு மற்றும் செய்முறை தேர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற நான் சான்றிதழும் பெற்றேன்.

பின்னர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் திருவண்ணாமலை வேங்கிக்கால் பகுதியில் இயங்கி வரும் SHOLOM SYSTEM என்ற நிறுவனத்தில் மாதம் ரூ. 8,500/- ஊதியத்தில் எனக்கு பணி வழங்கப்பட்டது. மாதத்திற்கு ஒரு ரூபாய் கூட சம்பாதிக்காமல் சும்மாவே வீட்டில் இருந்த நான் தற்போது மாதம் 8,500 ரூபாய் பெறும் அளவிற்கு என் தகுதி உயர்ந்துள்ளது. தன்னம்பிக்கையுடன் சொந்த காலில் நின்று குடும்ப முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறேன். எனக்கு பயிற்சியும், பணியும் வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-நூருநிஷா, திருவண்ணாமலை



மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

## புகைப்படத் தொழில் விரிவானது, பெண்ணாக இத்தொழிலில் சாதிக்க முடிகிறது!

வணக்கம். எனது பெயர் ரேகா, நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரம், நவணி தோட்டக்கூர்பட்டி ஊராட்சியில் கடந்த 25 ஆண்டுகளாக வசித்து வரும் நான் மகளிர் சுய உதவிக் குழுவிலும் உறுப்பினராக உள்ளேன். நான் கடந்த 6 வருடங்களாக புதுச்சத்திரம் பகுதியில் போட்டோ ஸ்டுடியோ நடத்தி வருகின்றேன். இதன் மூலம் எனக்கு மாதம் ரூ.15,000/- வரை வருமானம் கிடைத்து வந்தது.

எனது ஸ்டுடியோவை மேலும் விரிவுப்படுத்தவும் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்காகவும் எவ்வாறு கடன் பெறுவது என்று யோசித்து கொண்டிருந்தபோது தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதித் திட்டம் குறித்து புதுச்சத்திரம் வட்டார நவணி தோட்டக்கூர்பட்டி தொழில் சார் சமூக வல்லுநர் தீபா மூலம் அறிந்து கொண்டேன்.

பிறகு தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதித் திட்டத்தில் பயன் பெற புதுச்சத்திரம் வட்டார அலுவலகத்திற்கு சென்றேன். திட்டத்தின் மூலம் பயன் பெறத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகுதிகளைக் கேட்டறிந்து எனது விருப்பத்தை தெரிவித்தேன். பின்னர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் புதுச்சத்திரம் வட்டார அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அணித் தலைவர் முதலானவர்கள் எனது தொழிலை நேரில் வந்து ஆய்வு செய்து ஆவணங்களைப் பெற்று சென்றனர்.

பின்னர் மாவட்ட செயல் அலுவலர் அவர்களும் ஆய்வு செய்தார். ரூபாய் 5 இலட்சத்திற்கான கடன் விண்ணப்பம் தயார் செய்யப்பட்டது. அதில் எனது சொந்த பங்களிப்பு ரூ.50,000/- எனவும், திட்டத்தின் மானியத் தொகை 30 சதவீதம் எனவும் தயாரிக்கப்பட்டது. கடன் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட புதுச்சத்திரம் இந்தியன் வங்கியின் கிளை மேலாளர் எனது தொழிலை நேரில் ஆய்வு செய்தார்.

பிறகு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் வங்கியின் அனைத்து பணிகளும் முடிவடைந்தவுடன் வங்கியின் மேலாளர் எனக்கு ரூ. 4,50,000/- இணை மானிய திட்டத்தில் கடன் தர அனுமதி கடிதம் கொடுத்தார். பின்னர், மாநில அலுவலகத்தில் இருந்து மானியத் தொகை வந்தவுடன் வங்கி மேலாளர் கடன் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் பெற்ற தொகையைக் கொண்டு புதுவகை கேமரா, கலர் பிரிண்டர், குடை மற்றும் கணினி போன்றவற்றை வாங்கினேன். இதன் பயனாக திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு போட்டோ எடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. எனவே ஸ்டுடியோவை பார்த்துக் கொள்வதற்காகவும், அங்கு உள்ள பணிகளை செய்வதற்காகவும் ஒரு நபரை வேலைக்கு அமர்த்தி எனது தொழிலை விரிவுபடுத்தினேன். இந்த கடன் பெறுவதற்கு முன் மாதம் ரூ.15,000/- வரை வருமானம் ஈட்டி வந்த நான் தற்போது மாதம் ரூ.40,000/- முதல் ரூ.50,000/- வரை வருமானம் ஈட்டுகிறேன்.

வருமானத்தின் மூலம் மாதாமாதம் நான் திரும்ப செலுத்த வேண்டிய கடன் தொகையை தவறாமல் செலுத்தி வருகின்றேன். மகளிருக்கு முன்னுரிமை கொடுத்து குறைந்த வருவாய் ஈட்டி வந்த எனக்கு எளிய முறையில் மிகவும் குறுகிய காலத்தில் கடன் உதவி ஏற்படுத்திக் கொடுத்த இந்தியன் வங்கியின் மேலாளர் மற்றும் தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி.ரேகா, நவணி தோட்டக்கூர் பட்டி,
புதுச்சத்திரம் வட்டாரம், நாமக்கல் மாவட்டம்.



## ஊரகப் பகுதி உற்பத்தியாளர் நிறுவனங்களை தரமுயர்த்த, தமது திட்ட அலுவலர்களுக்கு புதிய பயிற்சிகளை அளித்து மேம்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் ஊரகத் தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து வளப்படுத்தி வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமது திட்டப் பகுதிகளில் இயங்கிவரும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் / நிறுவனங்களின் தொழில் வளத்தையும், வணிக பலத்தையும் மேம்படுத்த, அந்நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்து திறனுயர்த்துவதற்காக தமது திட்ட அலுவலர்களுக்கு விரிவான பயிலரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.

இந்தப் பயிலரங்கு நிகழ்ச்சியில் தமது திட்டத்தின் இளம் தொழில் வல்லுநர்கள் (YP), செயல் அலுவலர்கள் (EO), செயல் இயக்குநர்கள் (ED) ஆகியோருக்கு செப்டம்பர் 19-20 ஆகிய இரண்டு நாட்கள் விரிவான பயிலரங்கு நடத்தப்பட்டது. இதில் வணிகச் சந்தையில் உற்பத்தியாளர் நிறுவனங்கள் எதிர்கொள்ளவுள்ள சவால்கள், தொழில் சொற்கள், வணிகப்பகுதி அளவிடல், தொழில் மூலதனம், வெவ்வேறு சந்தை விவரங்கள், திட்டமிடல் மற்றும் இணக்கங்கள் ஆகியவை பயிற்றுவிக்கப்பட்டன. இந்தப் பயிலரங்கில் பயிற்சிப் பெற்ற திட்ட அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள உற்பத்தியாளர் நிறுவன நிர்வாகிகளைப் பயிற்றுவித்து அவர்களின் மேம்பாட்டுக்கு வழிவகுப்பார்கள்.



## தையல் தொழிற் பயிற்சியால் மேம்பட்டுள்ள மகளிரின் பொருளாதாரம்!

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்பட்டுவரும் சமுதாயத் திறன் பள்ளி பயிற்சி மூலம் சுய உதவிக் குழுவை சார்ந்த உறுப்பினர்களுக்கு தையல் பயிற்சி வழங்குவதற்காக 30 உறுப்பினர்களிடம் விண்ணப்பம் பெறப்பட்டது.

இப்பயிற்சிக்கு, பாச்சல் ஊராட்சியை சேர்ந்த திருமதி.விஜயலட்சுமி என்பவர் பயிற்றுநராகத் தேர்வு செய்யப்பட்டார். தையல் தொழில் செய்து வரும் இவர், அனைத்து வகையான ஆடைகளையும் தைக்கும் திறன் கொண்டவர். எனவே, இவர் மூலம் பயிற்சி கொடுப்பதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நிதி கோரி மாநில அலுவலகத்திற்கு முன்மொழிவு அறிக்கை அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் புதுச்சத்திரம் வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளியை உருவாக்க திட்டத்தின் மூலம் ரூ. 1,00,000/- நிதி வழங்கப்பட்டது.

திட்டத்திலிருந்து நிதி வந்தவுடன் புதுச்சத்திரம் வட்டாரத்தின் மகளிருக்கு 45 நாட்கள் பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டது. இந்த பயிற்சியின் மூலம் பிளவுஸ், உள்ளாடைகள் மற்றும் சுடிதார் போன்றவை தைப்பதற்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற அமலா என்பவர், பயிற்சிக்கு முன்னர் எந்த ஒரு வருமானமும் இன்றி அவரது கணவர் வருமானத்தையே நம்பி இருந்தார். தற்போது பயிற்சி பெற்ற பின்னர், மகிழ்மதி தொழிற்குழுவில் உறுப்பினராக சேர்ந்தார். தொழிற்குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தொடக்க நிதியில் பவர் தையல் இயந்திரம் வாங்கினார்கள். அந்த தையல் இயந்திரத்தின் மூலம் தொழிற்குழுவில் துணி தைத்து அமலா தற்போது மாதம் ரூ.10,000/- வரை வருமானம் ஈட்டி வருகின்றார்.

சமுதாயத் திறன் பள்ளியின் வெற்றி தொழில் முனைவோரை உருவாக்கி அவர்களைக் கொண்டு தொழிற்குழு ஆரம்பித்து பயிற்சியாளர்களுக்கான வேலை வாய்ப்பை கொடுப்பது முதல் படியாகும். இந்த பயற்சியின் மூலம் இந்த செயல்பாடு வெற்றிகரமாக நிறைவேறியது. புதுச்சத்திரம் வட்டாரத்தில் உள்ள மகளிர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# தமிழ்நாட்டின் ஊரகப் பகுதியிலுள்ள நிறுவனங்களில் மின்னணு (மேராபில்ஸ் டிஜிட்டல் செயலி) புத்தகப் பராமரிப்பு தொழில்நுட்பத்தை வழங்கி புரட்சிகரமான மேம்பாட்டை செயல்படுத்தி வருகிறது!

தமிழ்நாட்டில் ஊரகத் தொழில் முனைவோர்கள் தமது தொழில்களில் பல்வேறு வகையான சவால்களை சந்திக்கின்றனர். குறிப்பாக மேலாண்மை, வரவு செலவு கணக்கு, பொது வங்கிகளிடம் கடன் பெறுதல் மற்றும் மின்னணு (டிஜிட்டல்) பயன்பாடுகள் போன்றவற்றில் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இவ்வகை சிரமங்களை நீக்கி தொழில் சிறப்பாக வளர்வதற்கு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து, இணை மானிய நிதித் திட்டத்தின் கீழ், மேரா பில்ஸ் எனும் மின்னணு செயலி (டிஜிட்டல் ஆப்) மூலம் புத்தகப் பராமரிப்பு வசதியை வழங்கி, அதன் மூலம் வணிகத்தை கண்காணித்து அவர்களுக்கு பொதுவங்கியின் மூலம் கடனுதவியைப் பெற்றுத் தருவதுடன் டிஜிட்டல் சந்தைத் தளங்களும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த டிஜிட்டல் புக் கீப்பிங் செயலி VKP திட்டத்தின் இணை மானிய நிதித் திட்டத்தின் மூலம் 2000 ஊரகத் தொழில் முனைவோர்களை மேம்படுத்தி எளிதாகவும், நிலையாகவும் தொழில் வணிகத்தில் புதிய முறையில் மேம்பட வைக்கிறது. இதை முன்னெடுக்கும் விதமாக மேராபில்ஸ் முதன்மை பயிற்சித் திட்டம் 6 பணிக்கு முக்களை மேம்படுத்தியது.அதில் 207 திட்ட செயல் அலுவலர்கள் (PEs) மற்றும் தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களின் தொழில் சார் சமூக வல்லுநர்கள் (ECPs) பயிற்றுவிக்கப்பட்டனர்.

அதில் பயின்ற பயிற்றுநர்கள் ஆயிரக்கணக்கான குறுத்தொழில் முனைவோர்களை, மேராபில்ஸ் டிஜிட்டல்-புக் கீப்பிங் ஆண்ட்ராய்டு செயலியை பயன்படுத்தச் செய்து நிர்வாகத் திறனை மேம்படுத்தி வருகின்றனர். மேலும் அவர்களுக்கு தொழில்/வணிகத் தடை ஏற்படும் பொழுது மேராபில்ஸை பயன்படுத்த வைத்து தடையின்றி தொழிலை நடத்த உதவி வருகின்றனர்.

மேலும் மேராபில்ஸ் நுட்பத்தைப் பயின்ற தமிழ்நாட்டின் நாகப்பட்டினம், கடலூர், திருவாரூர், மயிலாடுதுறை, வேலூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், லகிரி, திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 203 ஊரகத் தொழில் முனைவோர்கள் அவர்களது வழக்கமான வணிகச் செயல்பாட்டிற்கு மேராபில்ஸ் செயலியைப் பொருத்திக் கொண்டனர். இவர்களின் வளர்ச்சியை உன்னிப்பாக கண்காணித்து அவர்களுக்கேற்ப டேஷ்போர்ட் உருவாக்கி அவர்களின் வார பொறுப்புகள் கண்காணிக்கப்படுகின்றன.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைப் பயிற்சி குறித்து எல்லோரும் நல்ல விதமான கருத்தை தெரிவித்தனர். புத்தகப் பராமரிப்பை எளிதாக்கியதற்கும், ஊரகத் தொழில் முனைவோர்களின் தொழில்களைத் திறம்பட நடத்த உதவியதற்கும் பாராட்டினர்.

மேராபில்ஸ் மூலம் தற்போது ஊரகத் தொழில் நிறுவனங்கள் தங்கள் இலாப/நட்டத்தை எளிதாக கண்காணிக்கவும், அவர்களது தொழிலுக்கு வேண்டிய கடனுதவிகளைப் பெற்றிடவும் பெரிதாக உதவி வருகிறது.

இவ்வகையில் 'மேராபில்ஸ் செயலி' ஊரகத் தொழில் புத்தாக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் எந்த அளவிற்கு சிறப்பாக உதவும் என்பதை நிரூபித்துள்ளது. இதுபோன்ற எளிய முறை மின்னணு (டிஜிட்டல்) முன்னெடுப்பு ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு உதவுவதோடு மட்டுமின்றி மக்களின் வாழ்வியலை எளிதாக்கியும், தமிழ்நாடு முழுவதும் வளமான ஊரக சமூகங்களை உருவாக்கியும் உதவி புரிந்து வருகிறது.



# முள்ளங்கி சப்பாத்தி

நாம் அன்றாடம் உணவில் சேர்க்கும் காய்கறிகளும், மற்ற பொருட்களும் உணவுக்கு சுவை ஊட்டுவது மட்டுமின்றி நம் வாழ்வை ஆரோக்கியம் மிகுந்ததாகவும் மாற்றுகின்றன. உடல் பருமனாக உள்ளவர்கள் அன்றாடம் முள்ளங்கி உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டால் அவர்கள் உடல் பருமன் குறைய வாய்ப்புண்டு. ஏனெனில் கெட்ட கொழுப்பை கரைத்து வெளியே தள்ளும் சக்தி வாய்ந்தது முள்ளங்கி. அவ்வகையில் முள்ளங்கி சேர்த்துச் சப்பாத்தி செய்தும் சாப்பிடலாம். ஓமம் சேர்ப்பதால் வாசம் நிறைந்த சத்தான சப்பாத்தி ரெடி!



**தேவையானப் பொருட்கள் :**

முள்ளங்கி - 2, கோதுமை மாவு - 1 கப், சிவப்பு மிளகாய்த்தூள் - 1 டீ ஸ்பூன், ஓமம் - 1 டீ ஸ்பூன், மஞ்சள் தூள் - 1/4 டீ ஸ்பூன், தனியாத் தூள் - 1/2 டீ ஸ்பூன், எண்ணை - 8 டேபிள் ஸ்பூன், உப்பு - 1/2 டீ ஸ்பூன்

**செய்முறை :**

முள்ளங்கியை நன்கு கழுவி பூத்துருவலாக துருவிக் கொள்ளவும். வாணலியில் சிறிது எண்ணை ஊற்றி காய்ந்த மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், தனியாத் தூள், ஓமம் சேர்த்து சிறிது பச்சை வாசனை போக வதக்கி கோதுமை மாவுடன் சேர்க்கவும். துருவிய முள்ளங்கி, உப்பு சேர்த்து மாவை நன்கு கலந்து தேவையானால் சிறிது தண்ணீர் சேர்த்து (முள்ளங்கித் துருவலிலேயே தண்ணீர் இருக்குமாதலால் தேவையானால் மட்டுமே தண்ணீர் சேர்க்கவும்) சப்பாத்தி மாவு பதத்திற்குப் பிசையவும். பிசைந்த மாவை சிறு உருண்டைகளாக்கி சப்பாத்தியாகத் தட்டி, ஒரு தோசைக் கல் அல்லது நான்ஸ்டிக் தவாவில் போட்டு இரு பக்கமும் எண்ணை ஊற்றி திருப்பி விட்டு எடுத்து பரிமாறவும்.

**குறிப்பு :**

சப்பாத்தியின் சுவை மற்றும் ஆரோக்கிய சுவையை அதிகரிக்க கேரட் துருவலையும், முள்ளங்கித் துருவலுடன் சேர்க்கலாம்.

## பயனுள்ள குறிப்புகள்

- ரவா, மைதா உள்ள டப்பாவில் பூச்சி, புழுக்கள் வராமல் இருப்பதற்கு கொஞ்சம் வசம்பை தட்டிப் போட்டால் பூச்சி, புழுக்கள் வராது.
- தயிர் நீண்ட நேரம் புளிக்காமல் இருக்க இஞ்சியின் தோலை சீவி விட்டு கொஞ்சம் தட்டி தயிரில் போட்டால் புளிக்கவே புளிக்காது.
- காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.
- பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.
- தோசை சுடும்போது தோசைக்கல்லில் மாவு ஒட்டிக் கொண்டு தோசை வராமல் இருந்தால் அதற்கு கொஞ்சம் புளியை ஒரு வெள்ளைத் துணியில் கட்டி, அதை எண்ணெய்யில் தொட்டு கல்லில் தேய்த்துவிட்டு தோசை சுட்டால் நன்றாக வரும்.
- சர்க்கரையில் 5 கிராம்புகள் போட்டு வைத்தால் எறும்பு வராது நீர்த்தும் போகாது.
- ரசப்பொடி இல்லாத போது ரசம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மிலகு சீரகத்துடன் ஒரு கரண்டி துவரம் பருப்பையும் வைத்து அரைத்துப் போட்டால் ரசம் சுவையாக இருக்கும்.
- கடலைப் பருப்பு வடை செய்வதற்கு பதிலாக காராமணியை ஊரவைத்து அத்துடன் வெங்காயம், சோம்பு, பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றையும் சேர்த்து, அரைத்து வடை சுட்டு, சுடச்சுட சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.
- அடைக்கு ஊறவைக்கும் அரிசி, பருப்புடன் சிறிது கொண்டைக் கடலையையும் ஊறவைத்து, அரைத்து அடை செய்தால் ருசியாக இருக்கும்.

திரு. **பா. பொன்னையா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## வருமானத்தை பெருக்கும் தொழிற்கடன் மூலம் தையல் தொழில்

செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் முகையூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் வானவில் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த திருமதி. சுகுணா ஆகிய நான் முன்பு கார்மெண்ட் தொழிற்சாலையில் கூலிக்கு வேலைக்கு சென்று வந்தேன். கூட்டமைப்பில் இருந்து தொழில் செய்வதற்கு கடன் தொகை வழங்குவதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து என்னுடைய பங்கு தொகையாக ரூபாய் 2000/-மும், கூட்டமைப்பிலிருந்து கடன் தொகையாக ரூ.20,000/-மும் பெற்று தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் 15.09.2022 அன்று புதிய தையல் இயந்திரம் வாங்கி தையல் தொழிலை துவங்கினேன். தொழிலையும் நல்ல முறையில் இலாபகரமாக நடத்தி வருகிறேன். இந்த வருமானத்திலிருந்து நான் அசலும் வட்டியுமாக இதுவரை ரூ.10000/- திரும்பச் செலுத்தி உள்ளேன். ஒவ்வொரு மாதமும் இலாபமாக ரூ.8000/- வரை வருமானம் பெறுகிறேன். இந்த வருமானத்தை கொண்டு குடும்பத்தை பொருளாதார நிலையில் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்கிறேன். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததைவிட தற்போது எனது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. எனது முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதாரசங்கத்திற்குநன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **சுகுணா,** வானவில் சுய உதவிக் குழு, முகையூர் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.



## கூட்டு பொறுப்பு குழுவாக உருவாகி உணவு பொருள் விற்பனை செய்யும் சுய உதவிக் குழுவினர்



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டாரம், நாட்டாணிபுரசக்குடி ஊராட்சியில் உள்ள கோபாலபட்டிணம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த பாரதி மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் இடியாப்பம் உற்பத்தி செய்து அருகில் உள்ள வீடுகளில் விற்பனை செய்து வந்தனர். அவர்களை தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் ஒருங்கிணைத்து 5 பேர் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுவாக உருவாக்கப்பட்டது. இவர்களின் தொழில் திறனை ஆய்வு செய்து, இந்தியன் வங்கி மணமேல்குடி கிளையின் மூலம் ரூ.1,25,000/- கடனுதவி வழங்கப்பட்டது. தொழிலுக்காக கடனுதவி பெற்ற பாரதி மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் தங்களின் தொழிலை விரிவுபடுத்தி, பக்கத்து ஊராட்சிகளில் உள்ள பெரிய உணவகங்களில் தாங்கள் தயாரித்த இடியாப்பங்களை மொத்தமாக விற்பனை செய்து வந்தனர். அதன் பயனாக திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கும் மொத்தமாக இடியாப்பங்கள் விறப்னை செய்திட விற்பனை ஆணை பெறப்பட்டு, தற்போது உணவகங்கள், சொந்த கிராமத்தில் உள்ள வீடுகள் மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு அதிக அளவில் இடியாப்பம் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். தங்களை ஒருங்கிணைத்து கடனுதவி பெற்று தந்து தங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு பாரதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று வாழ்வாதார வளர்ச்சி அடைந்து வரும் பயனாளிகள்

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வருவாய் ஈட்டும் தொழில் கடன் வழங்கி, அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகிறது. அவ்வாறு வாழ்வாதார வளர்ச்சி பெற்ற பயனாளிகளின் வெற்றிக் கதையை கேட்போம் வாருங்கள்.

## பெட்டிக் கடை நடத்துவதன் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளி



பொம்மையார்பாளையம் ஊராட்சி, குயிலாப்பாளையம் கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் ஜனகம், (க/பெ. பாலகிருஷ்ணன்), நான் வசிக்கும் பகுதியில் தாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதால், வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று பெட்டிக் கடை நடத்தி வருகிறேன்.

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தில் சிறப்பு பயனாளிக்கு தொழில் மேம்பாட்டிற்காக கடன் வழங்குவதை அறிந்து, கூட்டமைப்பினை அணுகி கடனுக்காக விண்ணப்பித்தேன். பயனாளி விளிம்புத் தொகை, ரூ. 2000/-, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக ரூ.18,000/- என மொத்தம் ரூ.20,000/- வங்கிக் கடனாக எனக்கு வழங்கப்பட்டது. இக்கடன் தொகையைக் கொண்டு எனது கடைக்குத் தேவையானப் பொருட்களை பாண்டிச்சேரியிலிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்து, அதை நான் வசிக்கும் பகுதியில் விற்பனை செய்வதன் மூலம் கூடுதலாக வருவாய் பெற்று, மாதம் ரூ.5,000/- வரை இலாபமாகப் பெறுகிறேன். இந்தத் தொகை எனது கடன் திருப்பம் மற்றும் குடும்ப செலவிற்கு உதவியாக உள்ளது. பொருளாதார வளர்ச்சி பெற்று.ள நான், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– ஜனகம்,** தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
குயிலாப்பாளையம் கிராமம், விழுப்புரம் மாவட்டம்

## தையல் தொழிலின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளி




செட்டிக்குப்பம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஓம் முருகா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினராக உள்ள எனது பெயர் திருமதி வெண்ணிலா, (க/பெ. விஜயகுமார்), நான் வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று தையல் தொழில் செய்து வருகிறேன்.

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தில் சிறப்பு பயனாளிக்கு தொழில் மேம்பாட்டிற்காக கடன் வழங்குவதை அறிந்து, கூட்டமைப்பினை அணுகி கடனுக்காக விண்ணப்பித்த எனக்கு, பயனாளி விளிம்புத் தொகை, ரூ. 2000/, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக ரூ.18,000/- என மொத்தம் ரூ.20,000/- வங்கிக் கடனாக வழங்கப்பட்டது. இக்கடன் தொகையைப் பெற்ற நான், தையல் இயந்திரம் வாங்கி, நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செட்டிக்குப்பம் ஊராட்சியில் வசிக்கும் பெண்களுக்கு வேலைப்பாடுகளுடன் கூடிய ரவிக்கை, நைட்டி, சுடிதார் போன்றவற்றை தைத்துக் கொடுத்து, தினமும் ரூ.250/- வரை வருவாய் பெற்று வருகிறேன். இந்தத் தொகையானது எனது கடன் திருப்பம் மற்றும் குடும்ப செலவிற்கு பெரிதும் உதவியாக உள்ளது.

தற்போது பொருளாதார வளர்ச்சி பெற்று நான், எனது வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– வெண்ணிலா,**
ஓம் முருகா மகளிர் சுய உதவிக் குழு,
செட்டிக்குப்பம் கிராமம், விழுப்புரம் மாவட்டம்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,30,200 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/– |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/– |
| மூன்று ஆண்டு | ரூ. 680/– |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் 3–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/– |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/– |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th October 2023 Posted at Patrika Channel, Egmore.

# இயற்கையிலே பொருள் எடுத்தோம்!
# இயற்கை வளம்பெற உரம் படைத்தோம்!

## இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள்

| வாழை வகைகள் / மதிப்புக் கூட்டுப் பொருட்கள் | மலர் வகைகள் | பருப்பு வகைகள் | இயற்கை உரங்கள் |
|---|---|---|---|

மீன் அமீனோ அமிலம் (இயற்கை உரம்)




நிறுவனப் பெயர்:
**ஸ்ரீரங்கம் வாழை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் லிமிடெட்.**
மாவட்டம்: **திருச்சிராப்பள்ளி**
வட்டாரம்: **ஸ்ரீரங்கம்**
ஊராட்சி: **அல்லூர்**

இவர்களது உற்பத்திப் பொருட்களை வாங்க தொடர்புகொள்ளவும்
**86808 09984**

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org
VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP